# இந்தியா திட்டமிட்டே மாநாட்டை குழப்பியது

(கொழும்பு)

சார்க் மாநாட்டைக் குழப்ப இந்தியா நன்கு திட்டமிட்டு செயற்பட்டதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளன ர். 5வது சார்க் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது அதற்கு இலங்கை தரப்பு சில (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 22 இதழ் 268
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 08-11-1991

## 'சார்க்' மாநாடு நிறுத்தம் இந்தியா காரணமல்ல

(புதுடில்லி)

கொழும்பில் நடைபெற விருந்த சார்க் மாநாடு நிறுத்தப்பட்டதற்கு இந்தியா காரணமல்ல என்று இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு. எட்வர்டோ பெலேரோ தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக (4-ம் பக்கம் பார்க்க)

## சில பொருட்களுக்கான தடைகள் நீக்கப்படும்

(கொழும்பு)

வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல ஸ்ரீலங்கா அரசினால் தடை விதிக்கப்பட்ட பொருட்களில் சிலவற்றின் தடையை நீக்கு வது குறித்த வாதாப்பு அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எந்தவகை பொருட்களுக் கான தடைகள் நீக்கப்பட (4-ம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கை தரப்பு சீற்றம்

# தெற்காசிய நாடுகள் பிளவுற்று 'சார்க்' அமைப்பு கலையலாம்

[கொழும்பு]

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒன்றுபட்டு இயங்கிவந்த தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான 'சார்க்' கலைந்து போகக் கூடியதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பில் நேற்று ஆரம்ப மாகவிருந்த இம்மாநாடு ரத் தானதையடுத்தே இச்சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

தொடர்ந்தும் இம் மாநாடு நடைபெறாது போகும் ஓர் நிலை ஏற் படும் பட்சத்தில் தெற்காசிய நாடுகள் பிளவுபடக்கூடிய (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை பத்திரிகைகள் பலத்த கண்டனம்

(கொழும்பு)

'சார்க்' மாநாட்டை இந்தியாவே குழப்பியதாக இலங்கைப் பத்திரிகைகள் பல பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன. இலங்கைப் பத்திரிகைகளின் செய்திகளை வன்மையாக மறுத்த இந்தியா, இச்செய் (4ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-ராணுவம் துப்பாக்கிச் சமர்!

[காங்கேசன்துறை]

விமன்காமம் சாந்தைப் பகுதியில் விடுதலைப் புலிகளுக் கும், ஸ்ரீலங்கா இராணுவத் திற்குமிடையில் கடும் துப் பாக்கிச்சமர் இடம்பெற்றது. நேற்று அதிகாலை சுமார் ஒரு மணி நேரமாக இடம் பெற்ற இத்துப்பாக்கிச் சமரின் போது இரு பகுதியினராலும் சரமாரியாக வேட்டுகள் தீர்க் கப்பட்டன.

துப்பாக்கிச் சமரின் நடுவே ஷெல் தாக்குதலையும் நடத் தியபடி இராணுவத்தினர் (4-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிக்கு அரசு முன்னுரிமை வழங்கலாம்

(கொழும்பு)

'சார்க்' மாநாடு நடை பெறுத போதும் வடக்கு- கிழக்கு பிரச்சினை தீர்ப்ப தற்கு அரசு முன்னுரிமை வழங் கலாமென எதிர்பார்க்கப்படு வதாக கொழும்புச் செய்தி கள் கூறுகின்றன.

இதற்கு முன்னோடியாக அரசு இந்த 'சார்க்' மாநா ட்டை பயன்படுத்தவிருந்த தாகவும் ஆனால் அது எதிர் பாராத விதமாக கைவிடப் பட்டபோதும் சமாதானத் திற்கான சில நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தும் குறிப்பிடத்தக்கது.

தொண்டமானின் கடிதத் திற்கு புலிகள் பதிலளித் திருப்பதும், காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உணவுக்கப் (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படலாம்!

(கொழும்பு)

6வது சார்க் மாநாடு கொழும்பில் திட்டமிட்டபடி நடைபெறாது போனதால் இலங் கையின் நிலைப்பாட்டில் மாற் றம் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக அவ தானிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாநாடு கைவிடப்பட் டதை தமக்கு பின்னடைவா கவே ஜனாதிபதி பிரேமதாஸ கருதுவதாகவும் அந்த அவதா னிகள் தெரிவித்தனர். (4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவ பாகிஸ்தான் தயார்

(கொழும்பு)

இலங்கைக்கு எந்த வகையி லும் உதவத் தமது நாடு தயா ராகவிருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் நவாப் ஷரீப் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள ஜனாப் ஷரீப் இந்த உறுதிமொழியை (4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய ஹெலிகள் நாடு திரும்பின

(கொழும்பு)

'சார்க்' தலைவர்களின் பாது காப்பு ஏற்பாடுகளுக்காக இந் தியா வழங்கியிருந்த 3 ஹெலி கொப்டர்களும் இந்தியா திரும் பியுள்ளன.

'சார்க்' மாநாடு ரத்தா னதையடுத்தே மேற்படி 3 ஹெலிகளும் இந்தியா திரும்பி (4-ம் பக்கம் பார்க்க)

## சார்க் ரத்து காங்கிரஸ்' கவலை

(புதுடில்லி)

சார்க் மாநாடு ரத்துச் செய்யப்பட்டது குறித்த இந் திராகாங்கிரஸ் கட்சிக்கு பெரும் ஏமாற்றம் என்றும் (4ம் பக்கம் பார்க்க)

## தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வில்லி கப்பலில் வந்துள்ள 127 தபால் பொதிகளின் விநி யோகம் இன்று நடைபெறு மென யாழ். தபால் செயலகம் தெரிவித்துள்ளது.

# சிறைக்கைதிகளாக வாழும் தமிழ் மக்கள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அகதி முகாம்களில் தங்கியிருக்கின்ற தமிழ் அகதிகள் கடந்த ஒரு வருடமாக வீடுகள், தொழில் வசதிகள், வெளித் தொடர்புகள் இன்றிச் சிறைக்கைதிகளாகஇருந்துவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை மீண்டும் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் அப்பகுதி அதிகாரிகள் எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

இதேவேளை பொத்துவில் பகுதியில் 4000 தமிழர்கள் அகதிகளாகி கோமாரியில் வசித்துவருகின்றனர். வட்டி தெளிப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையில் 247 தமிழ்மக்களுக்குச் சொந்தமான வீடுகள் முழுமையாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (56)

## இருஇலங்கைத் தமிழர் தமிழகத்தில் கைது

(சென்னை)

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபாவும் அவரது தோழர்கள் 14 பேரும் கொலைப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் இரு இலங்கைத் தமிழர், தமிழக பொலிசாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் முறையே திருச்சி நகருக்கு அருகிலுள்ள அகதி முகாமிலும், சைதாப்பேட்டை அகதி முகாமிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதாகிய இருவரையும் அடுத்த மாதம் 9-ஆம் திகதி வரை பொலிஸ் காவலில் வைக்குமாறு நீதிபதி எஸ். எஸ் கித்தில் உத்தரவிட்டுள்ளார். (உ)

## 'ரே'வின் போக்கிற்கு இந்திய கேர்ணல் சாட்டை

(புதுடில்லி)

விடுதலைப்புலிகளை இந்தியப் படைகள் ஒடுக்கத் தவறியதற்கு இந்தியப் புலனாய்வுப் பிரிவின் (ரோ) தவறான தகவல்களும், மதிப்பீடும், சில அரசியல்வாதிகளின் குறுக்கீடும்தான் காரணமென இந்திய இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்ற கேர்ணல் ரவி நந்தா தான் எழுதிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அப்புத்தகத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்; விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அதிரடிப் படைக்கும் இஸ்ரேல் அரசு பயிற்சி அளித்து வந்தது என்ற தகவலை 'ரோ' அலட்சியம் செய்தது. அதனால் யாரும் புலிகளை வெல்ல முடியாது என்ற போர்ச் சூழ்நிலையில் இந்தியப்படை சிக்கிக்கொண்டது.

இரண்டரை வருடமாக இந்தியப்படையை எதிர்த்து புலிகள் போராடின். அதனால் வேறு வழி இல்லை என்ற நிலைக்கு புலிகள் தள்ளப்பட்டனர். ஆனால் அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு வர இந்தியப்படைகள் நிர்ப்பந்திக்க முன் அரசியல்வாதிகள் குறுக்கிட்டனர்.

இலங்கையிலிருந்து சினர். பிரிட்டிஷ்காரர், பாகிஸ்தானியர்களை விலக்கி வைக்கவும் இலங்கையில் அமெரிக்க தளங்களுக்கான அனுமதி வழங்கப்படுவதை தடுக்கவும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டதாகவும் இந்தியப்படையும் அங்கு அனுப்பப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

## இந்திய ஹெலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம்மாநாட்டிற்கென பாகிஸ்தான் வழங்கியிருந்த 4 ஹெலிகளும் தற்போது கொழும்பிலே நிற்பதாகவும் தெரியவருகிறது. (வி-153)

## இலங்கைநிலைப்பாட்டில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் இந்த சார்க் மாநாடு எப்போது நடைபெறுமென்பதிலும், அடுத்த மாநாடு குறித்து இலங்கை அக்கறைப்படாமலும், மற்றும் தொடர்ந்தும் இந்த மாநாட்டை நடாத்த இலங்கை விருப்பப்படாமல் போகலாமெனவும் கூறப்படுகிறது. (சி)

## வீதிகளில் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனைப்பகுதி கடை வீதிகளில் கார், சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற எந்தவித வாகனங்களையும் நிறுத்திவைக்கக் கூடாதென்று அங்குள்ள படையினர் தடைவிதித்துள்ளனர்.

வர்த்தக நிறுவனங்களுக்குள் வாசகர்களுடன் வரும் தமிழ் மக்களை படையினர் கடுமையாக சோதித்த பின்னரே விடுகின்றனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோர்களையும் படையினர் கைதுசெய்து வருகின்றனர்.

இதேவேளை கல்முனைக்கும், காரைதீவுக்குமிடையில் உள்ள எல்லைப்பகுதியில் வைத்து சகல வாகனங்களும் இராணுவத்தினரால் கடும் சோதனைக்குள்ளாக்கப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (56)

## இந்தியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கல்களை கொடுத்ததாகவும் இதற்கு பழிவாங்கலாகவே இந்தியா இந்த மாநாட்டை குழப்பியதாகவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

எதுஎப்படியாயினும் 'சார்க்'கின் எதிர்காலம் ஒரு கேள்விக் குறியாகவே அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வி-158)

## ஊழியர் லீவு குறித்து சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 11-ஆம் திகதியிலிருந்து மீண்டும் சனிக்கிழமை பிற்பகல் 1 மணியுடனும், ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் வர்த்தக நிலையங்களை மூடி, ஊழியர்களுக்கு லீவு வழங்குமாறு யாழ். வர்த்தகர் சங்கமும் வர்த்தகர் ஊழியர் சங்கமும் இணைந்து கடை உரிமையாளர்களுக்குப் பணிவான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளன.

தீபாவளி தினத்தை முன்னிட்டுக் கடந்த இரு வாரங்கள் பாவனையாளர்களுக்கு உதவும் முகமாக கடைகளில் வியாபாரம் நடைபெற்றன. இதனால் இவ்விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சார்க் மாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் கூறியதாவது; திட்டமிட்டபடி மாநாட்டை நடாத்தமுடியாது என மாலைதீவு அதிபர் அப்துல் கையூமிடமிருந்து தகவல் கிடைத்தபின்பே இந்தியப் பிரதமர் பீ.வி. நரசிம்மராவ் தமது இலங்கை விஜயத்தை ரத்துச் செய்ததாகவும் தெரிவித்தார்.

பூட்டான் மன்னர் மாநாட்டில் கலந்துகொள்ள முடியாததையிட்டே மேற்படி முடிவு எடுக்கவேண்டி ஏற்பட்டதாகவும் மாலைதீவு அதிபர் குறிப்பிட்டிருந்ததையும்சுட்டிக்காட்டினார்.

பூட்டான் மன்னரின் பிரதிநிதியுடன்மாநாட்டைநடாத்த முயற்சி எடுக்கப்பட்டபோதும் அம்முயற்சி கைகூடவில்லை என்று இலங்கை வெளியுறவு அமைச்சகம் கவலை தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சாவகச்சேரியில் ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சந்தைப் பகுதியை நேற்று நண்பகல் 12 மணியளவில் சுற்றி வட்டமிட்ட ஹெலிகொப்டரிலிருந்து 50 ரவுண்ட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சில பொருள்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாம் என்பது குறித்த தகவல் எதுவும் இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை.

வடக்கிற்கு 48 பொருட்களும் கிழக்கிற்கு இல பொருட்களும் எடுத்துச் செல்ல தடைவிதிக்கப்பட்டிருந்ததும் கடந்த ஆகஸ்ட் மாதம் 8ம் திகதி மேற்படி பொருட்களுக்கான தடையுத்தரவு அமுலுக்கு வந்ததும் தெரிந்ததே. (உ)

## இலங்கை தரப்பு

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

வாய்ப்புக் ஏற்படுமென ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (சி)

## இலங்கை பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கும், இந்தியாவுக்கும் எதுவித தொடர்புமில்லையெனத் தெரிவித்துள்ளது.

இந்தியப் பத்திரிகைகள் சிலவும் மாநாடு ரத்தானது குறித்துக் கவலை தெரிவித்துள்ளன. (சி)

## புலிகள்-ராணுவம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் காவலரண்களை நோக்கி முன்னேற முயன்ற சமயம் புலிகள் எதிர் தாக்குதல் நடத்தி இராணுவத்தை தடுத்து நிறுத்தினர். (86)

## சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மல் வர இணக்கம் காணப்பட்டுள்ளதும், வடபகுதியில் ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டதும், மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிலவற்றின் மீதான தடை நீக்கப்பட்டதும் இதற்கு முன்னோடியாக அமையலாமெனவும்கூறப்படுகிறது. (சி)

## திருமலை மாவட்டத்தில் 171 படை முகாம்கள்

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் தற்போது 171 படைமுகாம்கள் இருப்பதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

இவற்றுள் 121 சிறிய இராணுவ முகாம்களும், (கடற்படை, விமானப்படை உட்பட) 50 பொலிஸ் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றுள் இராணுவத்தினர், பொலிசார் மற்றும் கடற்படையினர் பலத்த பாதுகாப்புடன் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (உ)

## ஜனசக்திக்குப் பதிலாக விசேட உணவு முத்திரைகள்

(யாழ்ப்பாணம்)

ஜனசக்திக்குப் பதிலாக அடுத்தவாரம் முதல் விசேட உணவுமுத்திரைகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் கடந்த காலத்தில் ஜனசக்தியை பெற்று வந்த மக்களுக்கு அடுத்த வாரம் முதல் விசேட உணவு முத்திரைகள் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்கள் மூலம் வழங்கப்படவிருப்பதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி)

## சார்க் ரத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரைவிலேயே இந்த மகாநாடு நடைபெறும் என்றும் இந்திராகாங்கிரஸ் கட்சி கூறியுள்ளது;

குறிப்பாக சார்க் நாடுகளிடையே பிராந்திய ஒத்துழைப்பும் அண்டைய நாடுகளுடன் நல்ல உறவுகளை வைத்துக்கொள்வதற்கும் இந்தியா உயர் முன்னுரிமை வழங்குவதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பு மாநாட்டில் மனுவிள பேச்சுக்கள் நடைபெறுமென தமது கட்சி எதிர்பார்த்ததாக காங்கிரஸ் கட்சி பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## சூறாவளிக்கு 6,500 பேர் பலி

(மணிலா)

பிலிப்பீன்ஸில் கடந்த செவ்வாய்க்கிழமை வீசிய சூறாவளியினால் கிழக்குப் பகுதியில் 6,500 பேர் இறந்தும், காணாமலும் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் மழையால் நூற்றுக்கணக்கான வீடுகளும் இடிந்து விழுந்தன.

மீட்பும் பணியில் 10க்கு மேற்பட்ட ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

## இலங்கைக்கு உதவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ளார்.

திட்டமிட்டபடி 'சார்க்' மாநாடு நடைபெறுமென போனது கவலைக்குரியதே என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## மரண அறிவித்தல்

### சோ. சடாட்சரம்

(இளைப்பாறிய தபால் அதிபர், முன்னாள் நாவற்குழி கிராம சபைத் தலைவர்)

இளைப்பாறிய தபாலதிபரும் முன்னாள் நாவற்குழி கிராமசபைத் தலைவரும் ஆகிய திரு. சோ. சடாட்சரம் அவர்கள் 7-11-1991 வியாழன் அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சோமலிங்ககுமாரின் அன்புத் தந்தையும் லெகுமாரியின் அன்பு மாமனாரும், ஆர்த்தி, விஷாகன், விஷாந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-11-91 இன்று மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்; ச. சோமலிங்ககுமார் (மகன்)

(வ-5577)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் விநியோகத்தாரால் யாழ்ப்பாணம் கென்கோவில் மேற்கு வீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/31.